Original Suit No.171/2019 நாள்:12.04.2024

**வா.சா.4 ஜெகநாதன் அவர்களின் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனக்கு என்ன தொழில், என்ன வேலை என்று சொல்லவில்லை. தற்போது எனக்கு வியாபாரம், வேலை எதுவும் இல்லை. தாவா சொத்தில் எ அட்டவணை சொத்திற்கு கீழ்புறத்தில் எனக்கு வீடு இருக்கிறது. நான் அங்கு இருக்கிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எ அட்டவணை சொத்திற்கு கீழ்புறத்தில் இ அட்டவவணை சொத்து உள்ளது எனவும் அங்கு வீடு உள்ளது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் என்னிடம் இருக்கிறது. அப்படி ஒரு பத்திரம் இல்லை என்றும் தாக்கல் செய்தால் தாவா சொத்திற்கு அருகில் என் வீடு இல்லை என தெரியவரும் என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அம்மையப்பனுக்கு பூர்விக சொத்துக்கள் என குறிப்பிட்டிருக்கிறேன். அனைத்தும் பூர்வீக சொத்துக்கள். என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் எ மற்றும் இதர அட்டவணை சொத்துக்களை பொருத்து தனிதனியாக சொல்லியிருக்கிறேன் அது வழக்கு விபரம் தெரியாமல் அவ்வாறு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளை பொருததவரையில் அவர்கள் தாவா சொத்தில்அனுபவித்தில் இருக்கிறார்கள் என்பது மட்டும தான் எனக்கு தெரியும். கிரைய வாங்கிய விபரம் பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரங்களை நான் பார்க்கவில்லை. தாவா சொத்துக்களில் பி அட்டவணை சொத்தில் வீடு இருக்கிறது. அதன் ஒவ்வொரு அட்டவணை சொத்திற்கும் எல்லைகள் சொல்லமுடியும். நான் ஆவணம் எதையும் பார்க்காமல் அதன் எல்லைகளை குறிப்பிடுகிறேன். தாவா சொத்துக்களில் பி அட்டவணையை ஒட்டி அதன் மேல்புறத்தில் வாதி குடியிருக்கும் வீடு உள்ளது. அப்படி வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு விபரங்கள் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனறால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.04.12 17:19:54 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.